கற்றலுக்குப் பாதை அமைப்போம்

# முன்னேறுவோம்

# தமிழ்

## TAMIL

வகுப்பு 7

மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்.

## முன்னுரை

2019 முதல் 2021 வரையிலான கோவிட் பெருந்தொற்றின் காரணமாக உருவான சூழ்நிலையால் மாணவர்களுக்கு நேரடிக் கல்வி முழுமையாகக் கிடைக்கவில்லை. மாணவர்களின் கற்றலில் சில இடைவெளிகள் இருப்பதாக 2022 இல் நடைபெற்ற முதல் பருவத்தேர்வுத் தாள்களை மதிப்பீடு செய்தபோதும், ஆசிரியர்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டபோதும் தெரிய வந்தது. முன் வகுப்புகளில் கிடைக்கவேண்டியிருந்த சில கருத்துகள் மாணவர்களுக்கு மீண்டும் கிடைப்பதற்கும் தொடர்கல்வியை உறுதிப்படுத்துவதற்கும் உதவுகின்ற செயல்பாடுகளை உட்படுத்தி ஒரு சிறுநூல் உருவாக்கி வழங்க உள்ளோம். மாணவர்களுக்கு ஏற்பட்ட கற்றல் இடைவெளிக்குத் தீர்வுகாணும் வகையில் தேவையான விளக்கங்களும் செயல்பாடுகளும் இந்நூலில் உட்படுத்தப்படுள்ளன. மாணவர்கள் சுய கற்றல் அல்லது ஆசிரியர்களின் உதவியுடன் இச் செயல்பட்டு நூலைப் பயன்படுத்தித் தொடர்கல்வியில் நன்னம்பிக்கையோடு முன்னேற இயலட்டும்; வாழ்த்துகள்.

**இயக்குநர்**

எஸ்.ஸி.இ.ஆர்.டி

## உள்ளடக்கம்

- சுவரொட்டி
- கட்டுரை எழுதுதல்
- பிழை திருத்தி எழுதுதல்
- உரையாடல்
- தன்வரலாறு கூறுதல்
- வினா நிரல்
- பத்திரிக்கைச் செய்தி
- ஒப்பீட்டுக் குறிப்பு
- சொற்பொழிவுக் குறிப்பு

# சுவரொட்டி

உறுப்பு தானத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில் உங்கள் பள்ளியில் நடைபெறும் சிறப்பு முகாமிற்கான ஒரு சுவரொட்டி தயாரிக்கவும்.

சுவரொட்டிக்கான அமைப்பில் உட்படுபவை கீழே கட்டத்திற்குள் இடம்மாற்றி கொடுக்கப்பட்டுள்ளது. அதனைத் தேர்ந்தெடுத்து முறைப்படுத்தவும்.

கண்கொடுப்போம்

நேரம்

கண்ணொளி பெறுவோம்

10 மணி

நாள்

அனைவரும் வருக

அரசு நடுநிலைப்பள்ளி, கூவக்காடு

12.11.2022

மருதநாயகம் எம் பி பி எஸ் ( எப் ஆர் சி எஸ் )

சிறப்புரை ஆற்றுபவர்

ஆதரவு தருக.

**கவனிக்க வேண்டியவை**

- அமைப்பு (தலைப்பு, நாள், நேரம், இடம்)
- முக்கிய கருத்து
- சுருக்கம்
- தெளிவு

# கட்டுரை எழுதுதல்

விஞ்ஞான உலகில் தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி மிகப்பெரிது. இந்நி லையில் தகவல் தொலைதொடர்பு சாதாரண மக்களின் வாழ்வில் ஏற்படுத்திய மாற்றத்தை கட்டுரையாக எழுதவும்.

## தகவல் தொலைத்தொடர்பு

### முன்னுரை

பண்டைக் காலத்தில் கருத்துப் பரிமாற்றம் செய்ய புறாவினை தூது அனுப் பினர். காலப்போக்கில் அஞ்சல் முறை வழியாக கடிதங்களும், அதன் பின்னர் மின்னஞ்சல் வாயிலாகவும் செய்திகளும் அனுப்பப்படுகின்றன.

### பொருளுரை

தபால் துறை ஏழைகளின் நண்பனாய் உள்நாட்டு அஞ்சல், வெளிநாட்டுத் தபால், பண அஞ்சல் என்று பலவகையிலும் மக்களுக்கு உதவுகிறது.

**தொலைபேசி**

1876 ல் தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டது. ........................................................

**புலனம்**

..........................................................................................................

**மின்னஞ்சல்**

..........................................................................................................

### முடிவுரை

..........................................................................................................

**கவனிக்க வேண்டியவை**

- முன்னுரை, உபதலைப்புகள், முடிவுரை போன்றவை.
- கருத்துக்களை சிறப்பாக வரிசைப்படுத்துதல்
- கருத்தின் ஆழம் வெளிப்படும் விதம் சொந்தக் கண்ணோட்டத்துடன் விளக்குதல்,
- சுருக்கம், தெளிவு

***குறிப்பு:*** *தேவையேனில் இச்செயல்பாட்டை ஒரு நாள் முன்னரே கொடுத்து. மறுநாள் எழுத செய்யலாம்.*

# பிழை திருத்தி எழுதுவோம்

கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் கோரிக்கை மனுவின் ஒரு பகுதி தரப்பட்டுள்ளது. அவற்றிலுள்ள பிழைகளைத் திருத்தி எழுதுங்கள்.

எங்கல் பல்லியில் போதிய
மின்சார வசதி இள்ளாமல்
உல்லது. ஆகவே தாங்கல் தயவுசெய்து
எங்கல் பல்லிக்கு மின்சார வசதி செய்து
தரும்படி தாள்மையுடன் கேட்டுக்கொல்கிறேன்.

# உரையாடல்

பள்ளிச் சுற்றுலாவிற்கு சென்றுவந்த மூர்த்தி அவரது நண்பன் அருணை சந்தித்த போது தனது சுற்றுலா அனுபவத்தைக் கூறினான், அதைக் கேட்டு ரசித்த அருண் சில சந்தேகங்களைக் கேட்டான். அவர்களின் உரையாடலை முழுமை செய் யுங்கள்.

அருண் : நண்பா, நீங்கள் எப்போது பள்ளியிலிருந்து புறப்பட்டீர்கள்?

மூர்த்தி : திங்கள் கிழமை காலை 600 மணிக்கு பள்ளியிருந்து புறப்பட்டோம்.

அருண் : நீங்கள் முதலில் எந்த இடத்திற்குச் சென்றீர்கள்?

மூர்த்தி : பாலருவிக்குச் சென்றோம்.

அருண் : அப்படியா? வேறு என்னென்ன பார்த்தீர்கள்?

மூர்த்தி : ..............................................................................................................................

அருண் : ..............................................................................................................................

மூர்த்தி : ..............................................................................................................................

அருண் : ..............................................................................................................................

மூர்த்தி : ..............................................................................................................................

**கவனிக்க வேண்டியவை**

- சூழலுக்கேற்றவாறு கருத்து முழுமையுடன் எழுதுதல்.
- கருத்துக்களின் தொடர்பும் தொடர்ச்சியும்
- தெளிவு, சுருக்கம்
- உரையாடல் முழுமையாக உள்ளது.

உபமாவட்ட கலை விழாவிற்கு மோகனும் சுந்தரும் சென்று வந்தனர். அவர்கள் கலந்துரையாடியதை உரையாடலாக எழுதுங்கள்.

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

# தன் வரலாறு கூறுதல்

ஹரியும், கண்ணனும் பள்ளி நூலகத்திற்குச் சென்றனர். நூலகத்திற்குள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் நூல்களைக் கண்ட இருவரும் ஒவ்வொரு புத்தகத்தை யும் எடுத்துப் பார்த்தனர். அங்கிருந்து ஒரு புத்தகத்தை வாசித்துக் கொண்டே ஹரி தூங்கி விட்டான். அவனது கனவில் அந்தப் புத்தகம் வந்தது. அது அவ னுடன் பேசியதைக் கேட்போமா?

### புத்தகம் என்ன பேசியது?

ஹரி...ஹரி... என்னை மூடி வைத்து விட்டு உறங்குகிறாயா? என்னைப் போன்று அனேகர் உள்ளனர். பல மொழியிலும், பல வண்ணங்களிலும், பல அளவிலும் பல வடிவத்திலும் நான் இருக்கிறேன். என்னை அறிந்தவர்கள் அறிவாளிகள், என்னைப் புரிந்தவர்கள் புத்திசாலிகள். என்னை விரும்பாதார் எவருமில்லை. படிக்கப் படிக்க மகிழ்ச்சி தருவேன். கடல் அளவில் இருக்கின்றேன். என்னிடமிருந்து நிறைய செய்திகள் உங்களுக்கு கிடைக்கின்றன. உங்களின் கைகளில் ஒருசிறு துளியாகத் தான் வருகின்றேன். நான் அறிவை நிறைப்ப வன். கவிதை, கதை, இலக்கியம், இலக்கணம் என விரிவாக இருப்பவன். நான் உங்களுக்கு ஒரு நல்ல நண்பனாவேன். என்னை எல்லோரும் “ மந்திரப் பெட்டி” என்றழைக்கின்றனர். ( ஹரி கண் விழித்துப் பார்த்தான். புத்தகம் மேசை மீது இருந்தது )

**கவனிக்க வேண்டியவை**

- வாக்கிய அமைப்பு
- சொற்களின் கோர்வை
- கருத்துத் தெளிவு
- மையக் கருத்து

தாவரங்கள் உங்களுக்குப் பிடிக்குமல்லவா? மரம் உங்களிடம் பேசினால் எப்படி இருக்கும்? சிந்தியுங்கள் எழுதுங்கள்.

# வினாநிரல்

சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டியில் ஈட்டி எறிதலில் முதலிடம் பெற்ற நீரஜ் சோப்ராவை நேர்காண்பதற்கான வினாநிரல் தயாரிக்கப்பட்டுள்ளதைப் பார்ப் போம்.

- நீங்கள் ஈட்டி எறிதலை தேர்ந்தெடுத்ததன் காரணம் என்ன?
- எத்தனை வயது முதல் இப்போட்டியில் கலந்து கொண்டீர்கள்?
- உங்களின் திறமையைக் கண்டறிந்தவர் யார்?
- இதுவரை எத்தனைப் பரிசைப் பெற்றுள்ளீர்கள்?
- உங்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய பரிசு எது?
- ஈட்டி எறிதல் இல்லாமல் வேறு போட்டிகளில் பரிசு கிடைத்துள்ளதா?
- நீங்கள் அடைய விரும்பும் இலட்சியம் என்ன?
- விளையாட்டில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?

இதுபோன்று உங்கள் பள்ளிக்கு வருகை தரும் இருதயநோய் நிபுணர் டாக்டர் முகி லன் அவர்களை நேர்காண்பதற்கான வினாநிரல் தயாரியுங்கள்.

-
-
-
-
-
-
-
-
-

**கவனிக்க வேண்டியவை**

- வினாக்களின் சுருக்கம் தெளிவு
- பேட்டி காண்போரின் சிறப்புகளை வெளிப்படுத்தும் கேள்விகள்
- வினாக்களின் படிப்படியான வளர்ச்சி
- சூழலுக்கேற்ற வினாக்கள்

# பத்திரிக்கைச் செய்தி

நவீனத்திலும் பாரம்பரியத்தை பாதுகாக்கும் விவசாயி. பத்திரிகை செய்தியை வாசியுங்கள்.



சித்திரங்கோடு

## டிரினிட்டி சென்ட்ரல் பள்ளியில் விளையாட்டு விழா

அழகியமண்டபம், டிச.7-

சித்திரங்கோடு டிரினிட்டி சென்ட்ரல் பள்ளியில் 9-வது ஆண்டு விளையாட்டு விழா நடைபெற்றது. இதற்கு பள்ளியின் ஆட்சி மன்றகுழு துணை தலைவரும், குழித்துறை மறை மாவட்ட தொடர்பாளருமான இயேசுரத்தினம் தலைமை தாங்கினார். பள்ளியின் தாளாளர் அருள்தந்தை பால் ரிச்சர்ட் ஜோசப் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக முன்னாள் தடகள வீரர் ஆறுமுகம் பிள்ளை கலந்து கொண்டார். பள்ளி முதல்வர் அமலி வரவேற்றார். மாணவ, மாணவிகள் சேர, சோழ, பாண்டிய, பல்லவர் என்ற 4 அணிகளாக பிரிக்கப்பட்டு பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. இதில் சோழ அணி முதலிடம் பெற்றது. வெற்றி பெற்ற அணிக்கான கோப்பை வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை பள்ளி நிதி காப்பாளர் ராபர்ட் ஜான் கென்னடி, பள்ளி தாளாளர், முதல்வர், ஆசிரியர்கள், அலுவலக பணியாளர்கள் இணைந்து செய்து இருந்தனர்.

நமது பள்ளியில் நடைபெற்ற சுதந்திர தினவிழா நிகழ்வை பத்திரிகை செய்தியாக எழுதுவோம்.

**கவனிக்க வேண்டியவை**

- முக்கிய கருத்தை வெளிப்படுத்தும் தலைப்பு
- சிறப்பான தொடக்கம், படிப்படியான வளர்ச்சி
- கவர்ச்சி. தெளிவு
- நேரடியாக் கருத்துக்களைக் கூறுதல்.

# ஒப்பீட்டுக் குறிப்பு

**பெண்மை**

சாத்தி ரங்கள் பலபல கற்பராம்
சவுரி யங்கள் பலபல செய்வராம்
மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பராம்
மூடக் கட்டுகள் யாவுந் தகர்பராம்
காத்து மானிடர் செய்கை யனைத்தையும்
கடவு ளர்க்கினி தாகச் சமைப்பராம்
ஏத்தி ஆண்மக்களே போற்றிட வாழ்வராம்
இளைய நங்கையின் எண்ணங்கள் கேட்டீரோ
-பாரதியார்

**புதுமைப் பெண்கள்**

பாட்டி சொன்னாள்
நாங்கள் அடுப்படியில்
அடங்கிக் கிடந்த காலம்
பொற்காலம் என்று!
பேத்தி சொன்னாள்
நீ அடங்கி இருந்ததால்
தாத்தா ஐந்தாறு பெண்களை
அஞ்சாமல் மணந்தார்
என் கணவர்
அடுத்த பெண்ணிடம்
பேசுவதற்குக் கூட
என்னிடம் அனுமதி கேட்பார்!
எங்கள் வாழ்வில்
ஒருவனுக்கு ஒருத்தியாய்
ஒற்றுமையாய்
காலம் கழிக்கும்
எங்கள் காலம் தான்
பொற்காலம் என்றாள்
பாரதியின்
புதுமைப் பெண்கள்
புதுயுகம்
படைக்கின்றனர்.
பாரதிதாசனின்
புரட்சிப் பெண்கள்
புது யுகம்
படைக்கின்றனர்
பாரதிதாசனின்
புரட்சிப் பெண்கள்
சாதனைகள் சாதிக்கின்றனர்.
மதியோடு
பெண் இருக்கிறாள்
அதனால்தான்
மதிப்பெண்ணிலும்
முதலிடம் பெற்று
மதிப்பு பெறுகிறாள்
பணிப்பெண்கள்
பணியைப் பாங்காய்ச்
செய்வதனால்
எல்லா பணியிலும்
பணிப் பெண்ணே
இடம் பெறுகிறாள்
பெண்கள்
யாரையும் நம்பியதில்லை
தன்னையே நம்புகிறாள்.
தன்னம்பிக்கை இருப்பதால்
- ஈஸ்வரி ஏ. ஆர்

**இரண்டு கவிதைகளையும் ஒப்புமைப்படுத்தி ஒரு ஒப்பீட்டுக் குறிப்பு எழுதப்பட்டுள்ளது. அதை வாசியுங்கள்.**

கவிஞர் பாரதியார் எழுதிய பெண்மை என்ற கவிதையும் ஏ ஆர் ஈஸ்வரி எழுதிய புதுமைப் பெண்கள் என்ற கவிதையும் பெண்களைப் பற்றி கூறப்பட்டுள்ள கவிதையாகும். இரண்டு கவிதையிலுமே பெண்களை, புரட்சிப் பெண்கள், புதுயுகம் படைத்தவர்கள், சாதனையாளர்கள் என்றெல்லாம் புகழ்த்திக் கூறியி ருக்கின்றனர். பெண்மை என்ற கவிதை விடுதலைக்கு முன் தோன்றியதாகும். அன்றைய காலகட்டத்தில் உள்ள பெண்கள் மூடப் பழக்கவழக்கங்களை ஒழித்து எழுச்சிபெற வேண்டுமென்றும் சுதந்திரமாக வாழவேண்டுமென்றும் பெண்மை எனும் கவிதையில் பாரதியார் கூறுகிறார். புதுமைப் பெண்கள் என்ற கவிதை யில் பெண்களின் இன்றைய நிலையையும் வளர்ச்சியையும் பற்றி விளக்கியுள் ளார். பாரதியார் கண்ட கனவுகளை நினைவாக்கும் விதம் கவிதை அமைந்துள் ளது. இன்றைய பெண்கள் மதியோடு இருக்கிறார்கள். அதனால் மதிப்பெண்க ளும் அதிகமாக பெற்று எல்லா பணிகளிலும் முதலிடம் பெறுகிறாள் என்று பெண்ணை பெருமையாகக் கூறியுள்ளார்.

**திருவள்ளுவர் எழுதிய குறட்பாவின் கருத்தையும் நல்வழியில் உள்ள உழவின் உயர்வு என்ற பாடலின் கருத்துக்களையும் கலந்துரையாடி ஒப் பீடு செய்து எழுதுங்கள்.**

**திருக்குறள்**

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்.

**நல்வழி**

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றோ - ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை, கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு

# சொற்பொழிவுக் குறிப்பு

பள்ளிக் கலைவிழாவில் சொற்பொழிவாற்றுவதற்காக அருணுக்குக் கிடைத்த தலைப்பு " நான் விரும்பும் தலைவர்" என்பதாகும் சொற்பொழிவாற்றுவதற்காகத் தகவல்களைத் திரட்டி அருண் தயாரித்த சொற்பொழிவுக் குறிப்பை பாருங்கள்.

### நான் விரும்பும் தலைவர்

### ஜவஹர்லால் நேரு

அவையில் கூடியிருக்கும் சபையோரே, பெரியோர்களே, தாய்மார்களே அனைவருக்கும் என் முதற்கண் வணக்கத்த்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் விரும்பும் தலைவர் ஜவஹர்லால் நேரு அவரைப் பற்றி சொற்பொழிவாற்ற உங்கள் முன் வந்துள்ளேன். சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் சாச்சாஜி என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்படும் நேரு அவர்கள் 1889 ஆம் ஆண்டு நவம்பர் 14 தேதி உத்திரப்பிரதேசம் மாநிலத்திலுள்ள அலகாபாத்தில் மோதிலால் நேருவுக்கும் சொரூபராணிக்கும் மகனாகப் பிறந்தார். ஜவஹர்லால் நேரு குழந்தைகள் மீது பாசம் கொண்டவர். குழந்தைகள் அவரை நேரு மாமா என்று அன்போடு அழைத்தனர். அன்னாரின் பிறந்த நாளை குழந்தைகள் தினமாகக் கொண்டாடுகிறோம். நவீன இந்தியாவின் சிற்பி என்று அழைக்கப்பட்ட நேரு மாமா சுதந்திரப் போராட்டத்தில் முன்னணித் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். பலமுறை சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் இருந்த போது சில புத்தகங்களை எழுதினார். அதில் இந்தியாவின் கண்டுபிடிப்பு என்ற புத்தகம் சிறந்த படைப்பாகும். சிறையிலிருந்த போது தன்மகளான இந்திரா பிரியதர்சினிக்கு கடிதங்கள் அனுப்புவார். குழந்தைகள் மீது அன்பு கொண்டது போல ரோஜா மலர் மீதும் பிரியம் கொண்டவர். எப்போதும் தன் சட்டையில் ரோஜா பூவை அணிந்திருப்பார். அதனால் இவரை ரோஜாவின் ராஜா என்று அன்போடு அழைப்பார்கள். உலகில் அமைதியை நிலைநாட்ட பஞ்சசீல கொள்கையை வகுத்தார். இவர் பிரதமராக இருந்த போது இந்தியாவில் ஐந்தாண்டு திட்டங்கள் தொடங்கப்பட்டது. நேரு மாமா 1964 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் தேதி இயற்கை எய்தினார். அவர் மறைந்தாலும் அவரின் புகழ் இன்றும் நிலைத்து நிற்கிறது. என்று கூறி எனது சொற்பொழிவை நிறைவு செய்கிறேன் நன்றி! வணக்கம்.

**கவனிக்க வேண்டியவை**

- சிறப்பான தொடக்கம், படிப்படியான வளர்ச்சி
- சொற்பொழிவுக்கு ஏற்ற மொழிநடை
- கருத்துகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
- சுருக்கம், தெளிவு, முழுமை

இதுபோன்று பள்ளியில் ஆண்டுவிழாவில் உரையாற்றுவதற்காக "சுற்றுப்புறச் சுத்தம்" என்ற தலைப்பில் சொற்பொழிவுக் குறிப்பு தயார் செய்யுங்கள்.